செ.வெ.எண்:27 நாள்:17.03.2018

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் மின் ஆளுமைத்திட்டத்தின் கீழ் இ-சேவை மையம் வழியாக பொதுமக்களுக்கு சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், முதல் பட்டதாரி சான்றிதழ் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண் என்பதற்கான சான்றிதழ் ஆகிய 5 சான்றிதழ்கள் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன், மேலும், கீழ்க்கண்ட 15 வகை சான்றிதழ்களை இணையதள மின் சேவை மூலம் வழங்கிடும் திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 01-03-2018 அன்று துவக்கி வைத்தார்கள்.

1.விவசாய வருமானச் சான்றிதழ், 2.சிறு, குறு விவசாயி சான்றிதழ், 3.கலப்புத் திருமணச் சான்றிதழ், 4.விதவைச் சான்றிதழ், 5.வேலையின்மைச் சான்றிதழ், 6.குடும்ப குடிப்பெயர்வு சான்றிதழ், 7.கல்வி ஆவணங்கள் பேரிடரால் தொலைந்தமைக்கானச் சான்றிதழ், 8.ஆண் குழந்தை இன்மைச் சான்றிதழ், 9.திருமணமாகவில்லை என்பதற்கான சான்றிதழ், 10.வாரிசு சான்றிதழ், 11.இருப்பிடச் சான்றிதழ், 12.செல்வ நிலைச் சான்றிதழ் (Solvency Certificate), 13.அடகு வணிகர் உரிமம் (Pawn Brokers License), 14.வட்டிக்கு பணம் கொடுப்போர் உரிமம் (Money Lenders License), 15.இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான சான்றிதழ் (OBC Certificate).

மேற்படி 15 சேவைகளை பெறுவதற்கு பொதுமக்கள் தங்கள் அருகாமையில் உள்ள பொதுசேவை மையங்களில் விண்ணப்பித்து கொள்ளலாம். விண்ணப்ப எண்ணுடன் ஒப்புகைச் சீட்டு வழங்கப்படும். இவ்விவரம், அவர்களின் கைபேசிக்கு குறுஞ்செய்தியாக அனுப்பப்படும். விண்ணப்பங்களின் நிலவரத்தை அறிய பொதுமக்கள் **155250** என்ற எண்ணிற்குதங்களது விண்ணப்ப எண்ணை குறுஞ்செய்தி வாயிலாக அனுப்பியோ அல்லது இணையதளத்தில் விண்ணப்ப எண்ணை உள்ளீடு செய்தோ அறிந்து கொள்ளலாம். விண்ணப்பம் ஏற்கப்பட்டு சான்றிதழ் தயாரானதும், விண்ணப்பதாரருக்கு இணையதள முகவரியுடன் குறுஞ்செய்தி அனுப்பப்படும்.

இக்குறுஞ்செய்தி பெறப்பட்டவுடன் விண்ணப்பதாரர் வீட்டில் இருந்தவாறே இணையதளம் மூலமாக சான்றிதழை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது அருகாமையிலுள்ள அரசு பொது சேவை மையம் மூலமாக சான்றிதழை பெற்றுக் கொள்ளலாம்.

அரியலூர் மாவட்டத்தில் அரசு பொது இ-சேவை மையங்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள், மகளிர் திட்டம், அரசு கேபிள் டி.வி மற்றும் கிராமப்புற தொழில் முனைவோர் ஆகியவற்றின் மூலம் இயங்கி வருகின்றன.

பொதுமக்கள் தங்களது குடியிருப்புக்கு அருகில் இயங்கி வரும் பொது இ-சேவை மையங்களிலேயே விண்ணப்பித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**